**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2023 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 04–ஆம், நாள் திங்கட்கிழமை**
**CNR No.TNTI12-000178-2022**
**இ.ம.எண்.1320/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.144/2022**

டி.ஜோதி

... மனுதாரர்/4 ம் பிரதிவாதி

**.. எதிர் ..**

துளசிமணி

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 20.11.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.ஆர்.துரைகண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கை நிராகரிப்பு செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11(a) மற்றும் பிரிவு 151–ன்படி, மனுதாரரால்

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:-

2.1.) மனுதாரர் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், லோகநாதன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த விளம்புகை பரிகார வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் இந்த வழக்கின் வாதி என்றும், இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றும், வழக்கு அமைக்கப்பட்ட விதத்தின் அடிப்படையில் நிலைக்கத்தக்கது அல்ல என்றும், 29.07.2015 தேதியில் லோகநாதன் இறந்துவிட்டதாகவும், அவருக்கு வாரிசு சான்றிதழ் பெற எதிர்மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், மேற்கண்ட லோகநாதன் என்பவருடன் வாதிக்கு திருமணம் ஆனதற்கு எந்த சாட்சியமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதி உண்மையில் முத்துசாமி என்பவரின் சட்டப்படியான மனைவி என்றும், லோகநாதன் என்பவருக்கு திருமணமே ஆகவில்லை என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.339/2015-ல் தாக்கல் செய்ததாக சொல்லப்படும் தரப்பினர் சேர்க்கைக்கான மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை இந்த எதிர்மனுதாரர் மறைத்துள்ளதாகவும், லோகநாதன் என்பவருக்கு சொத்துக்கள் உள்ளதாக எதிர்மனுதாரர் கூறியுள்ளதாகவும், ஆனால் அந்த சொத்து தொடர்பாக லோகநாதன் இறப்பிற்கு முன்பாகவே கடந்த 27.03.2015-ல் லோகநாதன் உயில்

ஆவணம் மூலமாக ஒரு மோகன்ராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) லோகநாதன் இறந்த பிறகு மோகன்ராஜ் லோகநாதனின் சொத்துக்களை ஒரு கார்த்திக்கேயன் என்பவருக்கு கடந்த 08.10.2020–ல் விற்பனை செய்துவிட்டதாகவும், மேற்கண்ட கிரைய தேதியிலிருந்து கார்த்திக்கேயன் தான் சொத்தின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதாகவும், தற்போது லோகநாதன் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், ஆனால் லோகநாதனுக்கு சொத்துக்கள் இருப்பதாகவும், அதில் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், வழக்குரையானது நிராகரிக்கதக்கது என்றும், மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

3.1.) மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும், வழக்குரை பத்தி 1, 2–ல் உள்ள விபரங்கள் உண்மை என்றும், ஆனால் இந்த வழக்கு அமைக்கப்பட்டதன் அடிப்படையில் நிலைக்கத்தக்கது அல்ல என்றும், வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதாகவும், அவைகள் பொய் என்றும்,

எதிர்மனுதாரரின் கணவர் லோகநாதன் உடல் ஊனமுற்றவர் என்றும், கடந்த 06.12.2013 ம் தேதி பெரியகாளியம்மன் கோவிலில் எதிர்மனுதாரரை லோகநாதன் இந்து வழக்கப்படி திருமணம் செய்து கொண்டதாகவும், எதிர்மனுதாரரும் அவரது கணவர் லோகநாதனும் சொத்தின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வந்ததாகவும், இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்றும், லோகநாதன் உடல் ஊனமுற்றவர் என்பதால் அவரை எதிர்மனுதாரர் நன்றாக கவனித்து பாராமரித்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

3.2.) கடந்த 29.07.2015–ல் லோகநாதன் சொத்தை பற்றி எந்த ஏற்பாடும் செய்து வைக்காமல் எதிர்மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், லோகநாதனின் தந்தை நாராயணசாமி கடந்த 04.08.2012 தேதியில் இறந்துவிட்டதாகவும், லோகநாதனின் தாயார் ராமாத்தாள் கடந்த 16.06.2014–ல் இறந்துவிட்டதாகவும், தற்போது லோகநாதனுக்கு எதிர்மனுதாரர் மட்டுமே வாரிசு என்றும், அவர் சொத்தின் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருவதாகவும், இதற்கிடையில் ஒரு செல்வராஜ் மற்றும் ஜோதி ஆகியோர்கள் காலம் சென்ற லோகநாதனுக்கு வாரிசுகள் என்று அசல் வழக்கு எண்.339/2015–ஐ தாக்கல் செய்ததாகவும், மேற்கண்ட நபர்கள் லோகநாதனின் சகோதரர், சகோதரி என்றும், முக்கிய சங்கதிகளை மறைத்து மேற்கண்ட அசல் வழக்கினை லோகநாதனின் சகோதரர், சகோதரி சட்டத்திற்கு புறம்பாக சொத்தை அபகரிக்க வேண்டி தாக்கல்

செய்ததாகவும், அந்த வழக்கு கடந்த 23.12.2021–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3.3.) கடந்த 24.09.2020 தேதியில் 1ம் பிரதிவாதியும் வாதியும் சமரச ஆவணம் எழுதி நோட்டரி வழக்கறிஞர் திரு.இளவரசு முன்னிலையில் கையொப்பம் இட்டுள்ளதாகவும், அதில் கடந்த 29.07.2015–ல் லோகநாதன் இறந்துவிட்டதாகவும், அவருக்கு செல்வராஜ் மற்றும் ஜோதி ஆகியோர் சகோதரர், சகோதரி என்றும், மற்றும் லோகநாதனுக்கு வாதி மட்டுமே வாரிசு என்றும், 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அசல் வழக்கு எண்.339/2015 நிலுவையில் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், கடந்த 15.11.2018 தேதியில் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக அவிநாசி காவல் நிலையத்தில் வழக்கு தொடர்ந்ததை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அதில் வாதிக்கு 1/4 பங்கு உரிமை இருப்பதாகவும், கூடுதல் தொகையாக 5 லட்சத்தை வாதிக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி OS No.93/2020 வழக்கை சார்பு நீதிமன்றம் அவிநாசியில் இருந்தும் அ.வ.எண்.118/2020–ஐ இந்நீதிமன்றத்தில் இருந்தும் திரும்ப பெற்று கொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அந்த ஆவணங்கள் தொலைந்துவிட்டதால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், அதன் நகலை வாதி தாக்கல் செய்வதாக கூறப்பட்டுள்ளது.

3.4.) மனு பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி லோகநாதன் உயில் ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும், அந்த உயில் ஆவணம் உண்மை அல்ல என்றும், லோகநாதனுக்கு திருமணம் ஆகவில்லை என்று பொய்யாக கூறுவதாகவும், இந்த மனுதாரர் லோகநாதனின் சகோதரி ஜோதியின் மகன் ஆவார் என்றும், வஞ்சகக்கூட்டாக அசல் வழக்கு எண்.339/2015–ஐ தாக்கல் செய்திருந்ததாகவும், இந்த மனு அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–**

5.1.) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை 4 ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரரை வாதி என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதியால் விளம்புகை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்து

கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 7 விதி 11–ன் சட்ட வகைமுறையை இவ்விடத்தில் குறித்து உரைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

11. Rejection of plaint.-

The plaint shall be rejected in the following cases:—

(a) where it does not disclose a cause of action;

(b) where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the court to correct the valuation within a time to be fixed by the court, fails to do so;

(c) where the relief claimed is properly valued, but the plaint is written upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp paper within a time to be fixed by the Court, fails to do so;

(d) where the suit appears from the statement in the plaint to be barred by any law;

(e) where it is not filed in duplicate;

(f) where the plaintiff fails comply with the provision of Rule 9.

Provided that the time fixed by the court for the correction of the valuation or supplying of the requisite stamp papers shall not be extended unless the court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp papers, as the case may be within the time fixed by the court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.

5.3.) மேற்கண்ட சட்ட வகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் வழக்குரைக்கு வழக்கு மூலம் இல்லை என்றால் கட்டளை 7 விதி 11(a)–ன்படி வழக்குரையை நிராகரித்து உத்தரவிடலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. வாதி காலம் சென்ற லோகநாதனின் மனைவி இல்லை என்றும், லோகநாதனுக்கும் வாதிக்கும் இடையே திருமணம் ஆனதற்கு

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது லோகநாதனின் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்பதால் இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றும் வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்று பிரதிவாதி தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் முன்வைத்துள்ள வாதமானது காலம் சென்ற லோகநாதன் உடல் ஊனமுற்றவர் என்றும், வாதிக்கும் லோகநாதனுக்கும் இடையே கடந்த 06.12.2013 தேதியில் அவிநாசி பெரியகாளியம்மன் கோவிலில் இந்து வழக்கப்படி திருமணம் நடந்ததாகவும், இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது என்றும், லோகநாதன் பெயரில் சொத்து இருந்தது என்றும், பொய்யான உயில் ஆவணத்தை கொண்டு சொத்தை விற்பனை செய்துள்ளதாக இம்மனுவிற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.4.) இரு தரப்பு வாதப்பிரதிவாதங்களை கவனமாக பரிசீலித்து பார்க்கையில் பிரதிவாதி தரப்பில் சொத்து ஒரு கார்த்திக்கேயன் என்பவர் பெயரில் தான் தற்போது உள்ளதாகவும், லோகநாதன் இறப்பதற்கு முன்பாக கடந்த 27.03.2015–லேயே மோகன்ராஜ் பெயருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துவிட்டதாகவும், லோகநாதன் கடந்த 29.07.2015 தேதியில் காலமான பிறகு உயில் நடைமுறைக்கு வந்து மேற்கண்ட லோகநாதன் சொத்தை கார்த்திக்கேயன் என்பவருக்கு விற்று விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அந்த ஆவணம் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்குரை நிராகரிக்க தக்கதா என்பதை ஆராய்கையில்

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வழக்குரை நிராகரிக்கதக்கதா இல்லையா என்பதை வழக்குரையில் இருந்தும், வழக்குரையுடன் தொடர்புடைய ஆவணங்களிலிருந்தும் தான் அறிய வேண்டுமே தவிர பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்படும் ஆவணங்களை பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், கடந்த 27.03.2015 தேதியில் லோகநாதன் ஒரு மோகன்ராஜ் என்பவருக்கு உயில் ஆவணம் எழுதிவைத்ததாக கூறுவதை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68 மற்றும் இந்திய வாரிசுரிமை சட்டம் 63–ன்படி நிரூபிக்கப்படவேண்டும்.

5.5.) வாதி தரப்பில் சமாதான உடன்படிக்கை பத்திரம் எ.ம.சா.ஆ.1 ஆகவும், உறுதிமொழி பத்திரம் எ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை பொறுத்து வாதி தரப்பில் வழக்குரையில் வாதுரைக்கப்படவில்லை. எனவே அந்த ஆவணங்களை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அசல் வழக்கு எண்.339/2015 கடந்த 23.12.2021 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த தீர்ப்புரை வாதி தரப்பில் எ.ம.சா.ஆ.3 ஆகவும், தீர்ப்பாணை எ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.3, 4 ஆவணங்களிலிருந்து தற்போது அசல் வழக்கு எண்.339/2015 ஆனது நிலுவையில் இல்லை என்பதை அறியமுடிகிறது. வாதி தரப்பில் வழக்குரையுடன் வாக்காளர் பட்டியல், திருமண வரவேற்பு அழைப்பிதழ் ஆகியவை

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்காளர் பட்டியல், திருமண வரவேற்பு அழைப்பிதழ் ஆகியவை இந்த மனுவில் எ.ம.சா.ஆ.5, 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட எ.ம.சா.ஆ.5 ஆவணத்தில் வாதி துளசிமணியின் கணவர் பெயர் லோகநாதன் என்று குறிப்பிட்டு இருப்பதை அறியமுடிகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் வாதி துளசிமணியின் கணவர் லோகநாதன் என்பதற்கு முதல் தோற்ற வழக்கு உள்ளது. வாதி காலம் சென்ற லோகநாதனின் மனைவியா இல்லையா என்பதை வழக்கு விசாரணைக்கு பிறகு தான் முடிவு காண முடியும். மேலும், தற்போது சொத்து லோகநாதன் பெயரில் இல்லை என்று பிரதிவாதி தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வழக்கு விசாரணையில் பிரதிவாதி தரப்பில் சாட்சியமாக கொடுக்கலாமே தவிர இந்த மனு மீதான விசாரணையில் முக்கிய ஆவணம் அல்ல.

5.6.) வழக்குரையை கவனமாக பரிசீலிக்கையில் வாதிக்கும், ஒரு முத்துசாமிக்கும் இடையே திருமணம் நடந்துள்ளது. இருவருக்கும் குழந்தைகள் இல்லை. முத்துசாமி கடந்த 11.03.2011–ல் இறந்துவிட்டார். அதன் பிறகு கடந்த 06.12.2013–ல் வாதி லோகநாதனை திருமணம் செய்துள்ளார். லோகநாதன் கடந்த 29.07.2015–ல் இறந்துவிட்டார். வாதி மற்றும் லோகநாதனின் திருமண வாழ்கையில் குழந்தைகள் இல்லை. லோகநாதனின் பெற்றோர்களான நாராயணசாமி மற்றம் ராமாத்தாள் ஆகியோர் இறந்துவிட்டார்கள். தற்போது வாதி

மட்டுமே காலம் சென்ற லோகநாதனுக்கு வாரிசாக இருப்பதாகவும், அவருக்கு வாதி மட்டுமே வாரிசு என்றும், 1, 2 பிரதிவாதிகளை வாரிசு சான்றிதழ் கேட்டு அனுகிய போது வாதிக்கு லோகநாதன் இரண்டாவது கணவர் என்று குறிப்பிட்டு கடந்த 09.02.2016 தேதியில் குறிப்பாணை கொடுத்துள்ளதாகவும், அசல் வழக்கு எண்.399/2015 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், வேறுவழியின்றி லோகநாதனின் சகோதரர், சகோதரிகளை 3, 4 பிரதிவாதிகளாக சேர்த்து இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்திருப்பதை பரிசீலிக்கையில் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது என்பதை அறியமுடிகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 04.12.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.12.04 09:46:52 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :-**

**பிரதிவாதி தரப்பு ஆவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.10.2020 | கிரைய ஆவண எண்.10319/2020-ன் கணினி சான்றிட்ட நகல் |

**<u>வாதி தரப்பு ஆவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 24.09.2020 | சமாதான உடன்படிக்கை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 04.01.2016 | உறுதிமொழி பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 23.12.2021 | அ.வ.எண்.339/2015–ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 23.12.2021 | அ.வ.எண்.339/2015–ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | | வாக்காளர் பட்டியல் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 28.11.2014 | திருமண வரவேற்பு அழைப்பிதழ் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 09.02.2023 | இ.ம.எண்.52/2022–ன் எதிருரை சான்றிட்ட நகல் |

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.12.04 09:47:00 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.1320/2022
இன்
அ.வ.எண்.144/2022
சீரான/வரைவு உத்தரவு
நாள்.04.12.2023
மா.உ.நீ., அவிநாசி